**செய்தி வெளியீடு எண்:083** **நாள் : 19.02.2015**

## செய்தி வெளியீடு

# சென்னையில் ரூபாய் 2.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் மணிமண்டபப் பணிகள்

------

# மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி நேரில் ஆய்வு.

------

சென்னை ராயபுரத்தில், ரூபாய் 2.34 கோடி மதிப்பீட்டில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு கட்டப்பட்டுவரும் மணிமண்டபப் பணிகளை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்குவரும் காலங்களிலெல்லாம் நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கும், தமிழுக்கு பெருமை சேர்த்த பெரியவர்களுக்கும் புதிய மணி மண்டபங்களையும், நினைவகங்களையும் உருவாக்கி அவர்களின் புகழுக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள்.

அவ்வகையில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் மைலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.2.1860–ல் பிறந்து, கல்வி பல கற்று வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அண்ணல் காந்தியடிகள் ஒற்றுமையாமை இயக்கத்தை தொடங்கியபோது வழங்குரைஞர் அங்கியை தீயிலிட்டு கொழுத்திவிட்டு, தீவிரமான விடுதலை போராட்ட வீரராக மாறினார். 1.5.1923–ல் முதன்முதலாக மே தின நாளை விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர் சார்பில் கொண்டாடினார். தந்தை பெரியாருடன் சேர்ந்து சுயமரியாதை சமதர்ம கட்சியை தோற்றுவித்தார். தென்பகுதியில் நடைபெற்ற பல்வேறு தொழிற்சங்க போராட்டத்தை தலைமையேற்று நடத்தியவர். ஏழை தொழிலாளர் வர்கத்தினருக்காக பாடுபட்டவர் சிங்காரவேலர்.

இதைப்போன்று எழை மீனவர் குடும்பத்தில் பிறந்து திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஜீவரத்தினம் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்றவர்.

நீண்டகாலமாக இருந்து வந்த மீனவ சமுதாய மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் 12.9.2011 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு சென்னையில் மணிமண்டபங்கள் கட்டப்படும் என அறிவித்தார்கள்.

இதனடிப்படையில் சென்னை ராயபுரத்தில் ரூபாய் 2.34 கோடி மதிப்பீட்டில் மணி மண்டபங்கள் அமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளை பார்வையிடும் பொருட்டு, (18.02.2015) அன்று மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் இராயபுரம் சென்று, பணிகளை ஆய்வு செய்தார். பணிகளை, ஏப்ரல் மாதத்திற்குள் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுரை வழங்கினார். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த நல்ல நோக்கம் நிறைவேறும் வகையில் மணிமண்டபங்களை சிறப்பாக அமைக்கவும் அறிவுரை வழங்கினார். இம்மணிமண்டபங்களில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் ஆகியோருக்கு தனித்தனியாக மார்பளவு சிலை அமைக்கப்படவுள்ளது. மணிமண்டபத்திற்கு எதிரே குளிரூட்டப்பட்ட நவீன வசதியுடன்கூடிய நூலகம் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்நூலகத்திற்கு மின்ஆக்கி வசதி, வாகனம் நிறுத்துமிடம் போன்ற சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. உல. ரவீந்திரன் உட்பட பல்வேறு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**